திரியவிடக்கூடிய அளவில் சேரி அபிவிருத்தித் திட்டம் அமைந்திருக்கிறது. இப்படிச் சேரிகளை ஒழிப்பதற்குப் பதிலாக அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசாங்கம் வேண்டிய நடவடிக்கைகளை எடுக்குமா ? அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை நல்ல முறையில் அமைத்துத் தருவதற்கு அரசாங்கம் திட்டங்கள் போட்டிருந்தால் அவை என்ன என்பதைக் கனம் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்பதைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : தலைவர் அவர்களே, மதிப்பிற்குரிய அங்கத்தினர் அவர்கள் ஹரிஜனங்களுக்கு மாடமாளிகைகள் கட்டித் தருவதே எங்கள் நோக்கம் என நான் சொன்னது போலப் பேசுகிறார்கள். நான் சொன்னது கொஞ்சமாவது நல்ல வீட்டில் அவர்கள் வாழவேண்டும் என்பதுதான். அதற்காகவே சர்க்கார் பல திட்டங்களைப் போட்டிருக்கிறார்கள். வாழ்க்கைத் தரம் உயரவேண்டும் என்பது போலவே அவர்கள் நல்ல ஆரோக்கியமான இடங்களில் வசிக்க வழி வகைகளும் செய்து கொடுக்க வேண்டியது அவசியம். அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அரசாங்கம் பல முறைகளில் பணியாற்றி வருவது எல்லோருக்கும் தெரியும். கல்விச் சலுகை அளிக்கிறோம். மதுவிலக்குத் திட்டத்தினால் அரசாங்கத்திற்கு ஏராளமான நஷ்டம் என்றாலும் ஹரிஜனங்களுடைய பொருளாதார நிலைமைதான் கணிசமாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. குடிசைத்தொழில் வசதிகள் செய்து கொடுத்துவருகிறோம். இவை எல்லாமே அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் திட்டங்கள்தான் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

SRI D. DASARATHAN : சமீபத்தில் சர்க்காரால் விடுக்கப்பட்ட அறிக்கையின் பிரகாரம் இரண்டு ஏக்கருக்குக் குறைவாக நிலம் இருந்தால் அவர்கள் சம்மதம் இல்லாமல் சேரி விஸ்தரிப்புக்காக அவற்றை எடுத்துக்கொள்ள கூடாது என உத்தரவு இருக்கிறது. இதனால் பல மனுக்கள் பைசல் செய்யப்படாமல் சேரி விஸ்தரிப்புத் திட்ட வேலையே மிகவும் தாமதப்படுகிறது. ஆகவே புதிதாகப் போட்ட சட்டத்தைப் பரிசிலனை செய்து அம்மாதிரி 1½ ஏக்கர், 2 ஏக்கருக்குக் குறைவாக நிலம் உள்ளவர்களிடம் உள்ள நிலத்தையும் சிக்கல் இல்லாமல் பெற்று சேரி விஸ்தரிப்புத் திட்டத்தைத் துரிதமாகச் செய்ய கனம் அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் தலைவர் அவர்களே, நான் மந்திரியாக வந்த பிற்பாடு அந்தச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை. இருந்தாலும் கூட இரண்டு ஏக்கராவுக்குக் குறைவாக நிலம் உள்ளவர்கள் ஏழைகளாகத்தான் இருப்பார்கள். அந்த ஏழைகளுக்குக் கஷ்டம் வரக்கூடாது என்பதற்காகத்தான் அம்மாதிரியாகச் செய்யப்பட்டிருக்கும். பல இடங்களில், ஐந்து ஏக்கரா, பத்து ஏக்கரா நிலம் உடையவர்கள் இல்லையா ? எந்த இடத்தில் வசதியாக நிலத்தை வாங்க முடியுமோ, அங்கெல்லாம் துரிதமாக வாங்கி ஆவன செய்துவருகிறோம் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன். எந்த இடத்தில் வீடு கட்டினால் நல்லது என்பதைப் பொறுத்தே அந்த ஏற்பாடு செய்ய முடியும்.

SRI T. T. DANIEL : Sir, several hundred poor Harijans are now living on poramboke lands by constructing small thatched huts. Will the Government be pleased to take steps to register these small huts put up by these Harijans in their own names as that will also provide housing for them permanently?

THE HON. SRI P. KAKKAN : The Government will take necessary steps to aVssign lands whever possible.

SRI P. G. MANICKAM : கனம் சபாநாயகர் அவர்களே, வீட்டு நிலங்கள் வாங்குவதற்கும் இந்தத் திட்டத்திலிருந்து தொகை செலவழிக்கப்படும் என்று கனம் மந்திரி அவர்கள் தெரிவித்தார்கள். அநேக சேரிகள்